# ஆப்பிள்



- ஆப்பிள் பழம் பழவகைகளுள் ஒன்று.
- ஆப்பிள் இலையுதிர் மரவகையைச் சார்ந்ததாகும்.
- இலையுதிர் காலத்தில் பழங்கள் நன்கு முதிர்ச்சியடைகின்றன.
- ஆப்பிள் முதன் முதலில் மத்திய ஆசியாவில் தான் பயிர் செய்யப்பட்டது. தற்போது, உலகின் எல்லா விதமான குளிர்ப்பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது.
- ஆப்பிள் பழத்தை பழரசமாகவும் பதப்படுத்தப்பட்ட உணவுகளிலும் பயன்படுத்துகின்றனர்.
- இப்பழத்தை சாப்பிடுவதால் இரத்தம் தூய்மையடைவதுடன் அதிகரிக்கவும் செய்கிறது.

# ஆப்பிள்



- ஆப்பிள் மஞ்சள், பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் காணப்படும்.
- இவற்றில் கொழுப்புச் சத்துக்கள் கிடையாது. உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தருகின்றன.

தினம் ஓர் ஆப்பிள், மருத்துவரைத் தூர வைக்கும் (An apple a day keeps the doctor away) என்பது ஆப்பிளின் நன்மையைக் குறித்த பழமொழியாகும்.

# நன்றியுள்ள விலங்கு!



- நாய் வீட்டில் வளர்க்கப்படும் ஒரு செல்ல பிராணி.
- குட்டி போட்டு பால் கொடுப்பதால் பாலூட்டி வகையைச் சாரும்.
- சைவம், அசைவம் என இரு வகையான உணவுகளையும் உண்ணும்.
- நாய்கள் பெரும்பாலும் மனிதர்களைச் சார்ந்தே வாழும்.

# நன்றியுள்ள விலங்கு!



- வீட்டின் பாதுகாப்பிற்காகவே பெரும்பாலும் நாய்கள் வளர்க்கப்படுகின்றன.
- அவ்வாறு வளர்க்கப்படும் நாய்களின் நன்றியுணர்வு மிகவும் பாராட்டத்தக்கது.
- கேட்கும் திறன் மற்றும் நுகரும் திறன் மிக அதிகம்.
- ஏழு ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை வாழும்.
- நாய்களில் பலவகைகள் உள்ளன.

# சேவலும் கோழியும்



- சேவலும் கோழியும் பறவையினத்தைச் சேர்ந்தது. கோழியின் ஆணினம் சேவல். இவை தானியங்களை உணவாக உண்கின்றன.
- சேவல் பல வண்ணங்களிலும், தலையில் சிவப்பு நிறத்தில் ஒரு கொண்டையுடனும் காணப்படும். 3 கிலோ முதல் 4 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். இறைச்சிக்காகவும், சேவல் சண்டைக்காகவும் வளர்க்கப்படுகிறது.
- பறவையினமாக இருந்தாலும் இவைகளால் வெகுதூரம் பறக்க முடியாது. சேவல் **"கொக்கரக்கோ"** என கூவும்.
- கோழி முட்டையிட்டு அந்த முட்டைகளை 21 நாட்கள் அடைகாத்து குஞ்சு பொரிக்கும். கோழிகள் இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் வளர்க்கப்படுகிறது.

# கங்காரு



நீங்கள் படத்தில் பார்ப்பது

ஆஸ்திரேலிய நாட்டின் தேசிய விலங்காகும்.

ஆஸ்திரேலிய நாட்டில் மட்டுமே

காணப்படக்கூடிய விலங்கு கங்காரு ஆகும்.



- கங்காரு குட்டி போட்டு பால் கொடுக்கும்

  பாலூட்டி வகையைச் சேர்ந்தது.

- பெரும்பாலும் புற்களை விரும்பி உண்ணும்.

  உண்ட உணவை அசைபோடும் தன்மையுடையது.

- இதன் முன்னங்கால்கள் சிறியதாகவும், பின்னங்கால்கள்

  பெரியதாகவும் இருக்கும். இதன் மூலம் தாவி தாவிச்

  செல்லும். ஒரே தாவலில் ஆறடி உயரத்திற்குத் தாவும்.

  மணிக்கு அறுபது கிலோமீட்டர் வேகத்தில் ஓடும்

  திறனுடையது.

# கங்காரு



• கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஒரு புழுவைப்போல இருக்கும். அதனால் தனது குட்டியை வயிற்றுப்பகுதியில் உள்ள பையில் வைத்து வளர்க்கும்.

• ஓர் அங்குலத்திலிருந்து ஆறடி வரை வளரும்.

• கங்காருவில், சாம்பல்நிறக்கங்காரு, எலிக்கங்காரு, வலவி போன்ற சில வகைகள் உண்டு.

• கங்காரு ஒன்றோடு ஒன்று மோதும்போது குத்துச்சண்டை வீரரைப் போலத் தோன்றும்.




ஆஸ்திரேலிய நாட்டின் தேசியச்சின்னத்திலும் நாணயங்களிலும் கங்காருவின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.



# சிங்கம்



நாட்டிற்கு நாடு அரசர்கள் வேறுபடுவர். ஆனால் காட்டிற்கு அரசன் சிங்கம் மட்டுமே.

- சிங்கம் பாலூட்டி வகையைச் சேர்ந்ததாகும்.
- சிங்கம் மனிதர்களைப் போன்றே குழுவாக வாழும் இயல்புடையது.
- ஒவ்வொரு குழுவிலும் குறைந்தது இரண்டு ஆண் சிங்கங்கள் உட்பட பதினான்கு சிங்கங்கள் காணப்படும். ஆண் சிங்கங்கள் குழுவிலிருந்து வெளியேறி புதிய குழுவை ஏற்படுத்தும்.
- பெண் சிங்கம் வேட்டையாடுவதிலும், ஆண் சிங்கம் எல்லையைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தும்.

# சிங்கம்



- சிங்கத்தின் முழக்கமும் அதனுடைய பிடரி மயிரும் கம்பீரத்தை வெளிப்படுத்தும்.
- ஆண் சிங்கத்தின் முழக்கம் எட்டு கிலோமீட்டருக்கு கேட்கும்.
- சிங்கங்கள் பெரும்பாலும் இரவில் வேட்டையாடும்.
- மணிக்கு முப்பத்தாறு கிலோமீட்டர் வேகத்தில் ஓடும் திறனுடையது. மேலும் சிங்கங்கள் நன்றாக நீந்தவும் செய்யும்.



யானைகளைப் போன்றே சிங்கங்களிலும் ஆப்பிரிக்க சிங்கங்கள், ஆசிய சிங்கங்கள் என்ற இரு வகை உண்டு. ஆசிய சிங்கங்கள் இந்தியாவின் கிர் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன. ஆப்பிரிக்க சிங்கங்களை விட ஆசியா சிங்கங்கள் சிறியவை.

# எனது வகுப்பறை

என் பெயர் செல்வன். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன். எனது வீட்டிலிருந்து 2 கி.மீ தூரத்தில் பள்ளி உள்ளது. பள்ளிக்கு நான் நடந்து செல்வேன். எனது பள்ளியின் பெயர் அரும்பு மேல்நிலைப்பள்ளி. பள்ளியையும் ஆசிரியரையும் எனக்கு மிகவும் பிடிக்கும். நூலகத்தின் வலது பக்கத்தில் உள்ள ஐந்தாம் வகுப்பு “ஆ” பிரிவு தான் எனது வகுப்பறை.

எனது வகுப்பில் என்னையும் சேர்த்து சுமார் 25 மாணவர்கள் படிக்கின்றனர். குமார்,பாலு,சேகர் இம்மூவரும் என் நண்பர்கள். திருமதி கோமதி எனது வகுப்பு ஆசிரியர்.

டிங்........... டிங்........... டிங்........... ............ டிங்............ ......

பள்ளியில் மணி ஒலித்தது, “செல்வா வேகமா..... வா!...” ஆசிரியர் வந்து கொண்டிருக்கிறார் என்று குமார் கூறினான். செல்வன் வகுப்பிற்கு வேகமாகச் சென்றான். செல்வன் இருப்பிடத்தில் அமர்வதற்கும் ஆசிரியர் வருவதற்கும் சரியாக இருந்தது.

ஆசிரியர் உள்ளே வந்ததும் மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று தங்களது வணக்கத்தைத் தெரிவித்தனர்.

ஆசிரியர் :- அனைவருக்கும் அன்பு வணக்கங்கள், உட்காருங்கள்!

ராமு.... இன்று வகுப்பிற்கு யார் வரவில்லை?.....

ராமு :- சோமு,கந்தன்,சேகர் இம்மூவரும் வகுப்பிற்கு வரவில்லை.

ஆசிரியர் :- ஏன் வரவில்லை?

ராமு :- கந்தனுக்கும் சேகருக்கும் காய்ச்சல்,சோமு அவன் அத்தை ஊருக்குச் சென்றுள்ளான்.

**ஆசிரியர் :- சரி, ராமு உட்கார். கமலா, நான் இன்று எப்படி வணக்கம் தெரிவித்தேன்?**

**கமலா:- அன்பு வணக்கம்**

**ஆசிரியர் :- அன்பு என்றால் என்ன?**

**கருணையோடு இருத்தல், உதவிசெய்தல், பிறருக்குக் கொடுத்தல், பிறரின் துயரைப் போக்குதல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினர்.**

**ஆசிரியர் :- மிகச் சரியாகச் சொன்னீர்கள்..........! அன்பு என்ற ஒரு சொல் மூலம் நாம் பகைவர்களையும் நண்பர்களாக்கலாம்.**

**முத்து:- ஆமாம் வள்ளுவரும் அதைத்தானே "இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்று கூறுகிறார்.**

**ஆசிரியர் :- ஆமாம், முத்து நீ சொன்னது சரிதான் நமக்குத் தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்ய நம்மிடம் அன்பு இருக்க வேண்டும், அனைத்துப் பண்புகளுக்கும் அன்பு தான் அடிப்படை. நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு செய்து வாழ வேண்டும். செய்வீர்களா!......**

**நாங்கள் அனைவரிடமும் அன்புடன் இருப்போம்!............என்று மாணவர்கள் கூறினர்.**

**டிங்........... டிங்........... டிங்........... சரி நீங்கள் விளையாடுவதற்குரிய மணி ஒலித்துவிட்டது அனைவரும் விளையாட்டு மைதானத்திற்குச் செல்லுங்கள்!.. என்று ஆசிரியர் கூறினார். மாணவர்கள் அனைவரும் வரிசையாக விளையாட்டு மைதானத்திற்குச் சென்றனர்.**

# பேசும் படம்



குழந்தைகளே! எங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? நாங்கள் யார் என்று தெரியுமா? என் பெயர் டாமு, இவன் பெயர் ராமு அவன் பெயர் சோமு நாங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறோம் சொல்லுங்கள் பார்க்கலாம்!

ஓ.........மிகச் சரியாகச் சொன்னீர்கள் எங்களுடைய செயல்கள் உங்களுக்கு மூன்று உண்மைகளை உணர்த்தும் அவை:-

1. தீயவை பார்க்காதே!
2. தீயவை பேசாதே!
3. தீயவை கேட்காதே!

குழந்தைகளாகிய நீங்கள் எப்போதும் நல்லதையே சிந்தியுங்கள்! நல்லதையே செய்யுங்கள்! இதுவே நாங்கள் மூவரும் உங்களுக்குக் கூறும் செய்தியாகும்.

என்ன! பட்டூஸ் புரிந்ததா?